39

# உங்கள் விரோதியை அறியுங்கள்

## (12:1–7, 9, 10)

*11ம் அதிகாரத்தின் முடிவு வசனங்களில் நாம், ஏழாம் எக்காளம் ஊதப்படுதலைக் கேட்டோம்; நியாயத்தீர்ப்புக்கான காலம் வந்திருந்தது. அடுத்து ஏழு கோபக்கலசங்கள் அறிமுகப்படுத்தப்படும் என்று நாம் நினைத்திருக்கலாம், ஆனால் அந்த வரிசைத் தொடரானது 15, 16ம் அதிகாரங்கள் வரையிலும் தள்ளிப் போடப்பட்டுள்ளது. அதற்குப் பதிலாக, 12முதல் 14வரையிலான அதிகாரங்களில் நாம், தேவன் மற்றும் கிறிஸ்து ஆகியோரின் விரோதிகளைப் பற்றி அறிமுகப்படுத்தப் படுகின்றோம். 12ம் அதிகாரத்தில் நாம், (கிறிஸ்தவர்கள்) துன்புறுத்தப் படுதலுக்குப் பின்புறத்தில் உள்ள ஒருவனைச் சந்திக்கின்றோம்: அவன் பிசாசு என்பவனாக இருக்கின்றான். 13ம் அதிகாரத்தில் பிசாசின் இரண்டு துணையாளிகள் மேடைக்கு வருகின்றனர்: அவர்கள் மிருகமும் கள்ளத்தீர்க்கதரிசியும் என்ற இருவரும் ஆவர். பின்பு 14ம் அதிகாரமானது மோசம்போக்கும் மகாபாபிலோன் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுகிறது.*

*இந்தப் பாடத்திலிருந்து நாம், 12ம் அதிகாரம் பற்றிய படிப்பு ஒன்றைத் தொடங்குகின்றோம். இந்த அதிகாரம் மிகவும் இன்றியமையாததாக உள்ளது. இது வெளிப்படுத்தின விசேஷத்தின் இரண்டாவது பிரதான பகுதியைத் தொடக்கி வைக்கிறது என்று கல்வியாளர்கள் பொதுவாக ஒப்புக்கொள்கின்றனர். வெளிப்படுத்தின புத்தகத்தின் முதல் பாதி. சபைக்கும் ரோமாபுரிக்கும் இடையிலிருந்த மோதல்மீது அடிப்படைக் கவனம் கொண்டிருக்கையில், இரண்டாவது பாதி, காட்சிக்குப் பின்னணியில் இருந்த யுத்தத்தின்மீது அதிகமாய்க் கவனம் குவிப்பதாக உள்ளது: கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையிலான ஆவிக்குரிய யுத்தம், நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான போராட்டம்.*

*தேவனுடைய பிரதான விரோதியான பிசாசு என்பவனை அறிமுகப்படுத்துதல் என்பதே இந்த அதிகாரத்தின் முதன்மையான நோக்கமாக உள்ளது. கிறிஸ்தவர்களின் இடர்ப்பாடுகளுக்குச் சாத்தானே காரணமாயிருந்தான் என்பதை இந்தப்பகுதி வெளிப்படுத்துகிறது - மற்றும் இது, கிறிஸ்தவர்களைத் சாத்தான் அவமதித்தது ஏன் என்பதையும் விளக்குகிறது. இது தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் கேட்டிருக்கக் கூடியவைகளான, “நாம் ஏன் இவ்வாறு நடத்தப்படுகின்றோம்?”; “இதைப்*

*பெறத்தக்கவர்களாகும்படிக்கு நாம் என்ன செய்தோம்?''; ''நம்மை ரோமர்கள் ஏன் இவ்வளவாக வெறுக்கின்றனர்?"* போன்ற கேள்விகளுக்குப் பதிலும் அளிக்கிறது. *ரோமர்கள் அல்ல, ஆனால் சாத்தானே இவர்களை அதிகமாய் வெறுத்தான் என்பதை வசனப்பகுதி தெளிவாக்குகிறது. ரோமாபுரி என்பது சாத்தானுடைய கருவியாக (கைப்பாவையாக) மாத்திரம் இருந்தது.*

இன்றைய நாட்களில் நாம், கிறிஸ்தவர்கள் என்ற வகையில், அநீதியுடனும் தவறாக நடத்தப்படுதலுடனும் இன்னமும் போராடிக்கொண்டுள்ளோம். இந்த அதிகாரத்தின் போதனைகள், முதல் நூற்றாண்டில் தேவனுடைய மக்களிடத்தில் ஏற்புடைய வகையில் பேசியதுபோன்றே, இன்று நம்முடனும் பேசுகின்றன.

12ம் அதிகாரத்தைப் பற்றி நாம் மூன்று பாடங்களைக் கொண்டிருக்கும் அளவுக்கு இது மிகவும் முக்கியமான அதிகாரமாக இருக்கிறது. முதல் ஆறு வசனங்களின் மீது கவனம் குவிக்கிற நமது முதல் பாடமானது, சாத்தானைப் பற்றிய ஒரு அறிமுகமாகப் பயன்படும். உலகப்பிரகாரமான யுத்தம் பற்றிய பாடப்புத்தகங்கள், விரோதியைத் தோற்கடிப்பதற்கு, ஒருவர் விரோதியைப் பற்றிய யாவற்றையும் அறிந்திருக்க வேண்டும் என்று கூறுகின்றன. நீங்களும் நானும் ஈடுபட்டுள்ள மரணம் வரையிலுமான ஆவிக்குரிய யுத்தத்திலும் இந்தக் கொள்கை உண்மையானதாகவே உள்ளது (எபேசியர் 6:11-18).

## வலிமை மிகுந்த விரோதி (12:1-4)

**விரோதியின் இலக்கு: பெண் (வசனங்கள் 1, 2)**

இவ்வசனப்பகுதி, "அன்றியும் ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது" என்று தொடங்குகிறது (வசனம் 1அ). "அடையாளம்" என்பது அப்போஸ்தலரான யோவானுக்கு மிகவும் பிரியமான வார்த்தையாயிருந்தது; இது அவரது சுவிசேஷ விபரத்தில் அடிக்கடியும், வெளிப்படுத்தின விசேஷத்தில் ஏழுமுறைகளும் காணப்படுகிறது.[1] "அடையாளம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, ''திகைப்புக்குரிய, மிகவும் தனிப்பட்ட வகையான, முற்றிலும் குறிப்பிடத்தக்கதான,'' "வழக்கத்திற்குமாறான நிகழ்வாக, இயற்கையின் பொதுவான ஓட்டத்தை மாற்றுகிற'' சில விஷயங்கள் என்பதைக் குறிக்கிறது.[2] NIV வேதாகமத்தில் "a great and wondrous sign" ("மாபெரும் அற்புதமான ஒரு அடையாளம்") என்றுள்ளது.

இந்த அடையாளம் "வானத்தில்" தோன்றியது. சந்தர்ப்பப் பொருளில், "வானம்" என்ற வார்த்தை, தேவனுடைய விசேஷித்த இருப்பிடத்தையல்ல, ஆனால் ''வானத்தில் நட்சத்திரங்கள்'' உள்ள இடத்தை குறிப்பிடுகிறது (வசனம் 4) - வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், இது ஆகாயத்தைக் குறிக்கிறது. W. B. வெஸ்ட் என்பவர், "யோவான், தமக்கு மேல் இருந்ததும் நமக்கு மேல் இருக்கிறதுமான ஆகாயத்தில் ஒரு பெரிய அடையாளத்தைக் கண்டார்'' என்று எழுதினார்.[3] அப்போஸ்தலர், நட்சத்திரங்கள் உள்ள

வானங்களில் ஒரு பெரிய திரையில் முன்னிறுத்தப்பட்ட உருவங்களைக் கண்டார்.[4]

யோவான் கண்ட “பெரிய அடையாளம்” பின்வருமாறு: “ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள், அவள் பாதங்களின் கீழ் சந்திரனும், அவள் சிரசின் மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தன'' (வசனம் 1ஆ). சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள் ஆகியவற்றின் சாத்தியக்கூறான அடையாளத்துவங்களைப் பற்றி, ஆர்வமூட்டும் யூகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன,[5] ஆனால் வழக்கம்போலவே, முற்றான மனப்பதிவுதான் முக்கியமானதாக உள்ளது.[6] இந்தப் பெண், ஆகாயத்திரையில் தோன்றும் வகையில் இவளைக் கற்பனைசெய்து பாருங்கள்: இவள் சூரியனின் கதிர்களினால் நெய்யப்பட்ட ஒளிவீசும் உடையை உடுத்தியிருந்தாள், அந்த உடையின் ஒவ்வொரு நூலும் மின்னியது. இவளது கிரீடமானது பன்னிரண்டு வானவியல் வைரங்களைக் கொண்டிருந்தது, அவைகள் துடிப்பமிக்க வெள்ளை மற்றும் அக்கினி போன்ற சிகப்பு நிறங்கொண்டிருந்தன. இவளது பாதங்கள் நிலவின்மீது ஊன்றியிருந்தன.[7] இவள் ஒளிவீசிபவளாக, மகிமை பொருந்தியவளாக, மகத்துவம் நிறைந்தவளாக இருந்தாள்![8]

இருந்தபோதிலும், இவள் - ஒரு பெண் எப்படி தாக்குதலுக்கு ஆளாக முடியுமோ அப்படியே - தாக்குதலுக்கு ஆளாகக் கூடியவளாயிருந்தாள், ஏனெனில் “அவள் கர்ப்பவதியாயிருந்து, பிரசவவேதனையடைந்து, பிள்ளைபெறும்படி வருத்தப்பட்டு அலறினாள்” (வசனம் 2). எப்போதாவது குழந்தையைப் பெற்றெடுத்துள்ள ஒவ்வொரு பெண்ணும் (மற்றும் அந்த வேதனை வேளையில் தனது மனைவியின் அருகில் நின்றிருந்த ஆணும்) இந்த உருவகத்தை அடையாளப்படுத்த முடியும். பெண்ணொருத்தி பிள்ளையைப் பெற்றெடுக்கும்போது வேறு எந்த சிந்தனைக்கும் அல்லது பலத்திற்கும் இடமளிப்பதில்லை. பிள்ளை பிறக்கும் நேரத்தில் அவள் தாக்கப்பட்டால், தன்னைத் தானே தற்காத்துக் கொள்ள உதவியற்றவளாக இருப்பாள்.

இந்தப் பெண்ணுக்கு முன்னால் சதிராடிக் கொண்டிருந்த அபாயத்தைப் பற்றி நாம் அறிவதற்கு முன்பு (வசனம் 3), இந்த “சூரிய உடை, நட்சத்திர கிரீடம் மற்றும் சந்திரனை மிதித்துள்ள''[9] நபரை அடையாளப்படுத்தி ஆகவேண்டும். இவள் யாரை அல்லது எதைக் குறிக்கின்றாள் என்பது பற்றி முரண்பாடான கருத்துக்கள் கொந்தளித்துப் பெருகியுள்ளன.[10] கிறிஸ்துவே இவளது பிள்ளை என்று 12:5ல் தெளிவாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள விஷயமானது, ''மத்திய காலத்திய சபையில் இவளை இயேசுவின் தாயாகிய மரியாள் என்று அடையாளப்படுத்தும்படி பலரை வழிநடத்திற்று, மற்றும் இந்த விளக்கமானது கத்தோலிக்கப் பாரம்பரியத்தில் இன்னமும் நடைமுறையிலேயே உள்ளது.''[11] 1 மற்றும் 2ம் வசனங்களை மாத்திரம் நாம் ஆராய்ந்து பார்த்தால், நாமும் அந்த விளக்கத்துடன் கருத்தொருமிக்கத் சாய்வோம், ஆனால் இதன் சந்தர்ப்பப்பொருளானது, இந்தப்பெண் ஒரு தனிநபராயிருத்தல் என்பதைத் தவிர்த்து விடுகிறது. வில்லியம் பார்க்ளே

*என்பவர், "இவள் எந்த ஒரு தனிமனிதப்பிறவியாகவும் அடையாளப்படுத்த இயலாத அளவுக்கு மேம்பட்ட மனித உருவாக இருக்கின்றாள் என்பது மிகவும் தெளிவாக உள்ளது'' என்று சுட்டிக்காண்பித்தார். பிற்பாடு, இந்தப்பெண் எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் தாயாக சித்தரிக்கப்படுகின்றாள் (12:17), இது மரியாளுக்கு மிகவும் அரிதாகப் பொருந்திவரும் குறிப்பாக உள்ளது.*

*இந்தப் பெண் ஒரு தனிநபராக இருப்பதில்லையாதலால், மாம்சபிரகாரமான இஸ்ரவேல் மக்களில் உண்மையுள்ளவர்களைக் குறிப்பிடும் வகையில், இவளை ''இஸ்ரவேல் மக்களில் உண்மையுள்ளவர்கள்'' என்று பெயரிடுவதைப் பலர் ஆதரிக்கின்றனர். மேசியாவை இந்த உலகத்திற்குக் கொண்டுவருதல் என்பதே, தேவன் இஸ்ரவேல் மக்களைப் பிரித்து எடுத்ததற்கான நோக்கமாக இருந்தது (மீகா 5:2). இஸ்ரவேல் மக்களினம் தேவனின் மணவாட்டி என்று அழைக்கப்பட்டது, மற்றும் அது கர்ப்பம் அடைந்த ஒரு பெண்ணுடன் அடிக்கடி ஒப்பிடப்பட்டது. (ஏசாயா 9:6; மீகா 4:9, 10ஐக் காணவும்.) (வெளிப்படுத்தின விசேஷம் 12ல் உள்ள) இந்தப்பெண்ணின் வானத்துக்குரிய உடையானது, யாக்கோபு/இஸ்ரவேல் என்பவருடைய குடும்பத்தைப் பற்றிய யோசேப்பின் கனவை நமக்கு நினைவூட்டுகிறது (ஆதியாகமம் 37:9-11). பன்னிரண்டு நட்சத்திரங்கள் பன்னிரண்டு கோத்திரப் பிதாக்களைக் குறிக்கக் கூடும்.*

*அந்த விளக்கமானது இயேசுவின் பிறப்பிற்கு முன்னர் நன்கு செயல்படுவதாய் இருக்கிறது, ஆனால் அவர், ''தேவனிடத்திற்கு … எடுத்துக்கொள்ளப்பட்டார்'' (12:5) என்று நாம் வாசிக்கையில், அது (விளக்கம்) தனியே விழுந்துபோகிறது. கிறிஸ்து பரத்துக்கேறிய பின்பு, வலுசர்ப்பம் அப்பெண்ணைத் துன்புறுத்தியது (12:13); (கிறிஸ்து) பரத்துக்கேறிய பின்பு, மாம்சத்திற்குரிய இஸ்ரவேல் மக்கள் துன்புறுபவர்களாக இருக்கவில்லை, ஆனால் துன்புறுத்துபவர்களாக இருந்தனர் என்பது உண்மையாக உள்ளது (2:9; 3:9). மற்றும், அந்தப் பிள்ளை "எடுத்துக்கொள்ளப்பட்ட'' பின்பு, இந்தப் பெண் தேவனால் பாதுகாக்கப்பட்டாள் (12:6, 14-16), ஆனால் தேவன் இனியும் மாம்சப்பிரகாரமான யூதர்களுக்கு முன்னுரிமையாக நடத்தப்படுதலைத் தருவதில்லை என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது (ரோமர் 2:28, 29; 10:12; கலாத்தியர் 3:26-29).*

*இந்தப்பெண் என்பவள் சபையே என்பது 5ம் வசனத்திற்குப் பின்பு, தெளிவாகக் காணப்படுகிறது. வெளிப்படுத்தின விசேஷம் முழுவதிலும், சபையே துன்புறுத்தப்பட்டதாகவும், சபையே தேவனால் பாதுகாக்கப்பட்டதாகவும் உள்ளது. இவ்விதமாக, ''யோவானின் வெளிப்படுத்தின விசேஷத்தின் மிகப் பழங்காலத்திய விளக்கவுரை யாளர்கள், இந்தப்பெண் என்பவள் சபையாகவே இருக்க வேண்டும் என்று கருத்துக்கொண்டனர்.''[12] இருப்பினும், அந்த அடையாளம், இந்த அதிகாரத்தில், இயேசுவை இந்தப்பெண் பெற்றெடுத்ததாகக் கூறுகிற முதல் ஐந்து வசனங்களுக்கு முரண்படுவதாகக் காணப்படுகிறது. சபையானது*

இயேசுவைப் பெற்றெடுக்கவில்லை; மாறாக இயேசுவே சபையைப் பிறப்பித்தார் (மத்தேயு 16:18, 19).

இந்தப் பெண் என்ற அடையாளமானது, வெளிப்படுத்தின விசேஷத்திற்கு அசாதாரணமாய் இராத மாறும் அடையாளங்களில் ஒன்றாக உள்ளது, இது முதலில் ஒரு விஷயத்தையும் பின்பு இன்னொரு விஷயத்தையும் குறிப்பிடுகிறது. பழைய ஏற்பாட்டின் மாம்சத்திற்குரிய இஸ்ரவேல் மக்களுக்கும் புதிய ஏற்பாட்டின் ஆவிக்குரிய இஸ்ரவேல் மக்களுக்கும் இடையில் உள்ள உறவுமுறை பற்றி நமக்கு நாமே நினைவூட்டிக் கொள்ளுதல் என்பது, இதில் உள்ள சிரமத்தைக் களைந்து போடுவதற்கான எளிய வழிமுறையாக இருக்கலாம். முந்திய பாடம்[13] ஒன்றில் நாம், சபையானது இஸ்ரவேல் மக்களுக்குத் தேவன் கொண்டிருந்த தோற்றகால நோக்கத்தை நிறைவேற்றியது என்று குறிப்பிட்டோம். பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேல் மக்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்ட சொற்றொடர்கள் இப்போது சபையைக் குறிப்பிடப் பயன்படுத்தப் படுகின்றன: சபையானது "அவருக்குச் சொந்தமானவர்கள்" (எபேசியர் 1:14) மற்றும் தேவனுடைய "பரிசுத்த ஜாதி" (1 பேதுரு 2:9) என்றுள்ளது. இப்போது ஆபிரகாம் "விசுவாசிக்கிற யாவருக்கும் ... தகப்பனாயிருக்" கின்றார் (ரோமர் 4:11); சபையானது "தேவனுடைய இஸ்ரவேலர்" (கலாத்தியர் 6:16) என்று அழைக்கப்படுகிறது; மற்றும் "ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மைபாராட்டுகிற" மக்களே "நாமே விருத்தசேதனமுள்ளவர்கள்" (பிலிப்பியர் 3:3) என்று கூறப்படுகிறது. ஆகையால் நாம் இந்தப் பெண்ணை "இஸ்ரவேல்" என்ற பொதுச் சொற்றொடரைக் கொண்டு அடையாளப்படுத்துதல் பாதுகாப்பானதாக உள்ளது - அதாவது, இவள் இயேசுவின் பிறப்பிற்கு முன் மாம்சப்பிரகாரமான இஸ்ரவேல் என்பதாகவும், அவர் பரத்துக்கேறிய பின்பு இவள் சபை என்ற ஆவிக்குரிய இஸ்ரவேல் என்பதாகவும் இருப்பதாகப் புரிந்துக் கொள்ளப்பட வேண்டும்.

லியோன் மோரீஸ் என்பவர், "தொடக்காலக் கிறிஸ்தவர்களுக்கு, பழைய இஸ்ரவேல் மக்களுக்கும் உண்மையான இஸ்ரவேலான சபைக்கும் இடையில் ஒரு முக்கியமான தொடர்பு இருந்தது என்று கூறினார்.[14] எட்வர்டு மையர்ஸ் என்பவர், இந்தப் பெண்ணை, "இரு உடன்படிக்கைகளின் கீழும் தேவனுடைய மக்களாய் இருந்தவர்கள்"[15] என்று அடையாளப்படுத்தியிருக்கையில், புரூஸ் மெட்ஸெஜர் என்பவர், "முதலில் யூதத்துவ வடிவிலும், ... பின்பு தனது கிறிஸ்தவ வடிவிலும் உள்ள தேவனுடைய மக்களின் இலட்சியப்பூர்வம் வாய்ந்த சமூகம்" என்று இவளை அழைத்தார்.[16]

இந்தப்பெண் யாரைக்குறிக்கின்றாள் என்பதற்கு இதை ஒரு நியாயமான விளக்கம் என்று நான் நம்புகின்றேன், ஆனால் உண்மையான/மிகச்சரியான அடையாளத்துவம் சார்பு நிலையில் முக்கியமற்றதாக உள்ளது என்று கூற நான் துரிதப்படுகின்றேன். இவளுக்கும் வலுசர்ப்பத்திற்கும் இடையில் உள்ள நேர்மாறுதான் மிகவும் முக்கியமானதாக உள்ளது. அன்புமிக்க ஆனால் தாக்குதலுக்கு ஆளாகக்கூடிய இந்த உயிருக்கு முன்பாக,

*இப்பெண் எவ்வளவு அழகாக இருந்தாளோ, அந்த அளவுக்கு அழகற்றுக் காணப்பட்ட ஒரு இராட்சத விலங்கு ஊர்ந்து வந்தது.*[17]

***விரோதியின் பண்புகள்: வலுசர்ப்பம் (வசனங்கள் 3, 4)***

> *அப்பொழுது வேறொரு அடையாளம் வானத்திலே காணப்பட்டது, ஏழு தலைகளையும், பத்துக் கொம்புகளையும், தன்தலைகளின்மேல் ஏழு முடிகளையுமுடைய சிவப்பான பெரிய வலுசர்ப்பமிருந்தது. அதின் வால் வானத்தில் நட்சத்திரங்களில் மூன்றிலொருபங்கை*[18] *இழுத்து, அவைகள் பூமியில் விழத்தள்ளிற்று (வசனங்கள் 3, 4அ).*

*அருவருப்பான/கொடுமையான இந்த உயிரினத்தைச் சித்தரிக்க முயற்சிப்பதற்கு முன்பு, நீங்கள் ஒரு சிறுபிள்ளையாய் இருந்தபோது வாசித்த தேவதைக் கதைகளில் வரக்கூடிய ட்ராகன் என்ற வலுசர்ப்பத்தின் சித்திரங்கள் யாவற்றையும் முதலில் உங்கள் சிந்தையில் இருந்து நீக்கிப்போட வேண்டும். மாறாக கால்களைக் கொண்ட ஏழு தலைகளை யுடைய மாபெரும் ஊரும்பிராணி ஒன்றைக் கற்பனை செய்துகொள்ளுங்கள்.*[19]

*பெண்ணை அடையாளப்படுத்துவது பற்றி நாம் கற்றறிந்த யூகங்களை ஏற்படுத்த வேண்டியிருந்தது, ஆனால் வலுசர்ப்பம் குறித்து யூகம் என்பது அவசியமற்றதாக உள்ளது. 12:9ல் இவன், ''உலகமனைத்தையும் மோசம்போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம்'' என்று அடையாளப் படுத்தப்படுகின்றான் (20:2ஐக் காணவும்).*

*விளக்கவுரையாளர்கள், வலுசர்ப்பத்தின் விவரிப்புகளில் மறைந்துள்ள அர்த்தங்களைக் கண்டறிய முயற்சி செய்கின்றனர்,*[20] *ஆனால் அடிப்படையில் ஒவ்வொரு அம்சமும் வலுசர்ப்பமான நமது விரோதியின் சித்தரிப்பினுடைய முற்றான செயல்தாக்கத்திற்குக் கூடுதல் விபரம் அளிப்பதாக உள்ளது.*[21]

*இவன் ஒரு வலுசர்ப்பமாக இருக்கின்றான்: "வேதாகமரீதியான மற்றும் வேதாகமரீதியற்றதான இருவகை இறைவெளிப்பாட்டு இலக்கியத்திலும், வலுசர்ப்பம் என்பது தீமையைக் குறிப்பதற்கான மிகவும் பொதுவான உருவமாக உள்ளது.*[22] *இவன் பொல்லாங்காக, பாவ இயல்புடைய, அழிக்கிறதாக மற்றும் தேவனை எதிர்த்து நிற்பதாக உள்ள எல்லாவற்றின் சார்பாகவும் நிற்கின்றான்.''*[23]

*இவன் ஒரு சிகப்பான வலுசர்ப்பமாக இருக்கின்றான்: இவனது இரத்தச் சிகப்பான நிறம், இவனது கொலைசெய்யும் எண்ணப்போக்குகளையும் (6:4), இவனது பாவம் நிறைந்த இயல்பையும் (ஏசாயா 1:18) சுட்டிக்காண்பிக்கிறது.*

*இவன் ஏழுதலைகளைக்*[24] *கொண்ட வலுசர்ப்பமாக இருக்கின்றான்: ஏழுதலைகள் என்பவை அனேகமாக, இவனது மாபெரும் சூழ்ச்சித்தன்மையையும் தந்திரத்தையும் குறிக்கலாம் (2 கொரிந்தியர் 11:3).*[25] *இவனது பல தலைகள், இவனை அழிப்பது கடினம் என்றும் சுட்டிக்காண்பிக்கலாம்.*[26]

இவன் பத்துக் கொம்புகளைக் கொண்ட வலுசர்ப்பமாக இருக்கின்றான்: கொம்புகள் என்பவை பலத்தின் அடையாளமாயிருந்தன. பத்துக் கொம்புகள் என்பது இவனது மகாப்பெரிய வல்லமையைச் சுட்டிக்காண்பிக்கிறது.[28]

இவன் ஏழு கிரீடங்களைக் கொண்ட வலுசர்ப்பமாக இருக்கின்றான்: "... தன்தலைகளின்மேல் ஏழு முடிகளையுடைய(வன்)." "முடிகள்" என்பது (வெற்றியின் கிரீடம் என்று அர்த்தப்படும் stephanos என்ற வார்த்தைக்கு நேர்மாறாக) ''ஆளுகை செய்யும் கிரீடம்'' என்பதற்கான கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது.[29] ஏழு கிரீடங்கள், வலுசர்ப்பத்தின் மாபெரும் அதிகாரத்தை குறிக்கின்றன.[30]

இவன் ஒரு பெரிய வலுசர்ப்பமாக இருக்கின்றான்: "இவனது பெரிய உருவம், ஆகாயத்தில் ஊர்ந்து செல்லும்போது, இவனது வாலின் ஒரு சிறு அசைவு, மூன்றில் ஒருபங்கு நட்சத்திரங்களை இடம் பெயர்த்து அவற்றைப் பூமியில் சுழன்று விழும்படி செய்தது என்று விளக்கவுரையினால் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.[31] சிலர் இந்தச் செயலில் அடையாளத்துவ முக்கியத்துவத்தைக் காணுகின்றனர்,[32] ஆனால் இது அனேகமாக, "இவனது தசைகளைத் தளரசெய்தல் என்பதைக் காட்டிலும் அதிகமானதாக இராது,"[33] இது, வெற்றிகொள்ள இயலாத விரோதி ஒருவன் இங்குள்ளான் என்ற மனப்பதிவை கட்டுவிக்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.

மீண்டும் ஒருமுறை, விபரங்களினால் மூடப்பட்டு விடாதிருங்கள். நீங்கள் 1முதல் 4வரையுள்ள வசனப் பகுதியைக் கண்ணோக்கும்போது, பின்வரும் நேர்மாறின்மீது கவனத்தைக் குவியுங்கள்: ஒரு புறத்தில், தெளிவாகவே உதவியற்ற வகையில் ஒரு பெண் இருக்கின்றாள். இன்னொரு புறத்தில், மேல் ஆதிக்கம் செலுத்துகின்ற, பல தலைகளையுடைய, அக்கினிபோன்ற சிகப்பு நிறம் கொண்ட இராட்சத விலங்கு இருக்கிறது, இவனது மணிபோன்ற பாம்புக்கண்கள், பிள்ளைப்பேற்றின் வேதனையினால் துடிக்கத் தயாரான பெண், பிள்ளையைப் பெற்றவுடன் அவள்மேல் விழுந்து பிடிக்கத்தயாராகின்றான்.[34] ("ஒரு ஸ்திரீ மற்றும் ஒரு வலுசர்ப்பம்" என்ற விளக்க படத்தைக் காணவும்.) உதவியற்ற தன்மை மற்றும் அதீதமான அதிகாரம் கொண்ட வல்லமை ஆகியவற்றிற்கு இடையில் இதுவே மிகச்சிறந்த நேர்மாறாக உள்ளது! இந்தக்காட்சியைக் கண்ணோக்கும் சராசரி நபர், இந்தப் பெண்ணும் இவளது பிள்ளையும் உயிர்பிழைக்க வழியே இல்லை என்று கூறுவார். விளைவு என்பது முன்னதாகவே செய்யப்பட்ட ஒரு முடிவாகவே தோன்றிற்று.

## பயங்கரம் நிறைந்த விரோதி (12:7, 9, 10)

அவ்விடத்தில் நான் காட்சியைச் சில நிமிடங்களுக்கு உறையச் செய்து, "பெரிய சிகப்பான வலுசர்ப்பம்" என்பதை நெருக்கமாகக் காண்பதற்கு வேகமாக (உங்களை) நகர்த்தப் போகின்றேன். உங்கள் விரோதியை அறிதல் என்பது யுத்தத்தின் முதன்மையான சட்டங்களில் ஒன்றாக உள்ளது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், மற்றும் 12ம் அதிகாரம்,

*நம்மை அழிக்க விரும்புகின்றவன் யார் என்பதைப் பற்றி அதிகமாக நமக்குப் போதிப்பதற்கான நல்லதொரு வசனப்பகுதியாக உள்ளது. ''இந்த அதிகாரத்தில் வேதவசனங்களின் வேறு எந்த இடத்தைக்காட்டிலும் அதிகமாகப் பிசாசிற்குப் பல பெயர்கள் காணப்படுகின்றன.''[35] சாத்தான் மற்றும் அவனது நடவடிக்கைகள் பற்றிய விபரங்கள் தரப்பட்டுள்ள வசனங்கள் 7, 9 மற்றும் 10 ஆகியவற்றை முன்னதாக கண்ணோக்குங்கள்.*

***உங்கள் விரோதிகளை குறைவாக மதிப்பிட்டு விடாதீர்கள்***

*பிசாசனவன் தனது கட்டுப்பாட்டின்கீழ், "தூதர்களை," ஆவிக்குரிய செய்தியாளர்களைக் கொண்டிருக்கின்றான் என்று 7 மற்றும் 9ம் வசனங்கள் நமக்கு கூறுகின்றன (மத்தேயு 25:41ஐக் காணவும்).*

*வசனங்கள் 9ம் 10ம் ஒருசில தனித்தன்மையைக் குறிக்கும் பெயர்களை அளிக்கின்றன. முதலாவது இவன், ''பழைய வலுசர்ப்பம்'' என்று குறிக்கப்படுகின்றான் (வசனம் 9). இது நமக்கு ஆதியாகமம் 3ஐ நினைவூட்டுகிறது, மற்றும் ஏவாள் ஒரு சாதாரண சர்ப்பத்தினால் அல்ல, ஆனால் பிசாசினால்தான் கீழ்ப்படியாமைக்கு வழிநடத்தப்பட்டாள் என்று நமக்குக் கூறுகிறது.[36] பாவம் இந்த உலகத்தினுள் கொண்டுவந்த வேதனை மற்றும் இதயவலி யாவற்றையும் நினைத்துப் பாருங்கள். சாத்தானே இதற்குப் பொறுப்பாளியாக இருக்கின்றான்.*

*வலுசர்ப்பம் "பிசாசு" என்றும் அழைக்கப்படுகின்றான்.[37] "பிசாசு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள diabolos என்ற கிரேக்க வார்த்தை, "குற்றஞ்சாட்டுபவன்" அல்லது "பழிதூற்றுபவன்" என்று அர்த்தப்படுகிறது. இவ்விதமாக, 10ம் வசனத்தில் இவன் "... இரவும் பகலும் நம்முடைய தேவனுக்கு முன்பாக நம்முடைய சகோதரர்மேல் குற்றஞ் சுமத்தும்பொருட்டு அவர்கள்மேல் குற்றஞ்சாட்டுகிறவன் ...'' என்று சுட்டிக்காண்பிக்கப்படுகின்றான். யோபு உள்ளான நோக்கத்திலிருந்து தேவனுக்குக் கீழ்ப்படிவதாக அவர்மீது சாத்தான் குற்றம்சாட்டியதைச் சித்தரிக்கும் யோபு புத்தகத்தின் முதல் இரண்டு அதிகாரங்கள் இதன்மீதான மிகச்சிறந்த விளக்கவுரையாக இருக்கலாம். (சகரியா 3:1ஐக் காணவும்.) மெரில் டென்னீ, பிசாசானவன் "கிறிஸ்தவப் பண்புகளில் தவறுகளைக் கண்டறிய நாடுகின்றான், அவற்றைத் திருத்த நாடுவதில்லை, ஆனால் புகழ்ச்சியைக் கெடுத்து, விசுவாசிகள் என்று அறிக்கையிடுபவர்களைக் கனவீனப்படுத்த நாடுகின்றான்''[38] என்று கவனித்துள்ளார். நாம் யாவருமே புள்ளிகள்/கறைதிரைகள் அல்லது சுருக்கங்களைக் கொண்டவர்களாக இருப்பதால் (எபேசியர் 5:27; ரோமர் 3:23ஐக் காணவும்), நம் ஒவ்வொருவரையும் அவன் குற்றம் சாட்டக்கூடுதல் குறித்த முழுமையற்ற தன்மைகளைக் கண்டறிதல் என்பது பிசாசுக்குக் கடினமானதாக இருப்பதில்லை.[39]*

*அடுத்ததாக, வலுசர்ப்பம் ''சாத்தான்'' என்று குறிப்பிடப்படுகிறது (வசனம் 9). "சாத்தான்" என்பது "எதிராளி" என்று அர்த்தப்படுகிற, satanas என்ற கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது.[40] சாத்தான் நமது விரோதியாக, நமது எதிராளியாக, நமது பகைவனாக இருக்கின்றான்.*

*வலுசர்ப்பத்தின் வேலையைக் குறித்து, இவன் "உலகமனைத்தையும் மோசம்போக்குகிற''வனாக இருக்கின்றான் என்று கூறப்பட்டுள்ளது (வசனம் 9). மோசம் போக்குபவன் என்பதே இவனது பணிவிவரிப்பாக உள்ளது (யோவான் 8:44; 2 கொரிந்தியர் 4:4; 11:14). இவன் யூதாஸை மோசம்போக்கினான் (யோவான் 13:2, 27; லூக்கா 22:3), மற்றும் இவன் பேதுருவை மோசம்போக்க முயற்சி செய்தான் (லூக்கா 22:31). இவன் அனனியாவையும் சப்பீராளையும் மோசம்போக்கினான் (நடபடிகள் 5:3), மற்றும் இவன் நம் யாவரையும் மோசம்போக்க முயற்சி செய்கின்றான் (மத்தேயு 13:39; லூக்கா 8:12; எபேசியர் 6:11; 2 கொரிந்தியர் 2:11ஐக் காணவும்).*

*சாத்தான் என்பது வெறும் கதை, மூடநம்பிக்கையுள்ள மனங்களின் பிறழ்வான கற்பனை என்று ''அறிவுமிகுந்தவர்களை'' நம்பி இணங்கச் செய்தல் என்பது சாத்தானுடைய மிகவும் வெற்றிகரமான முயற்சிகளில் ஒன்றாக இருந்துள்ளது. அது உண்மையாக இருக்க வேண்டும் என்று நாம் விரும்பி இருக்கையில், அது உண்மையாக இருப்பதில்லை. வேதாகமம், ''தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள், ஏனெனில் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்'' என்று இன்னமும் எச்சரிக்கிறது (1 பேதுரு 5:8). நாம் நமது எதிராளியைப் புறக்கணிக்கவோ அல்லது குறைவாக மதிப்பிடவோ தைரியம் கொள்ளாதிருக்க வேண்டும்!*

**உங்கள் விரோதியை அதிகமாக மதிப்பிட்டு விடாதீர்கள்**

*இதற்கு மறுபுறத்தில், நாம் பிசாசானவனை அதிகமாக மதிப்பிட்டு விடவும்கூடாது. ஏர்ல் பால்மர் என்பவர் பின்வருமாறு விளக்கம் அளித்தார்:*

> *வானவியல் ரீதியான இந்தப் பொல்லாங்கின் சக்தியை அதிகமாக மதிப்பிடாதிருத்தல் என்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது. பொல்லாங்கு என்பது எப்போதுமே அது காணப்படுவதைக் காட்டிலும் குறைவான கனமுடையதாகவே உள்ளது. அது எப்போதுமே, தான் கொண்டிருக்கக் கூடாதவைகளான அச்சுறுத்தல்கள் மற்றும் வாக்குத்தத்தங்களுடன் மாறுவேட நடனம் செய்கிறது. இது பிசாசினால் ஏற்படுகிற சோதனையின் முக்கிய சாராம்சமாக உள்ளது. நம்மைத் துன்புறுத்துவதற்கான பிசாசின் வல்லமையை நாம் அதிகமாய் மதிப்பிடும்போது, அவனது சோதனைகளில் நாம் விழுந்துபோகுதல் என்பது, நமக்கு பிசாசானவன் உதவுவதாக ஏற்படுத்தும் அவனது ஆடம்பரமான வாக்குறுதிகளை நம்பி அவனது சோதனைகளில் வீழ்ந்துபோவது போன்றதாகவே உள்ளது. இவ்விரண்டுமே தவறானவைகளாக உள்ளன, ...*[41]

*சாத்தானை எதிர்த்து நிற்க முயற்சி செய்தல் பயனற்றதாக உள்ளது என்று சிலர் நினைப்பதாகத் தோன்றுகிறது. "இதைச் செய்யும்படி சாத்தான் என்னைத் தூண்டிவிட்டான்'' என்பது, அவனது சூழ்ச்சிகள் எதிர்த்து நிற்கக் கூடாததாக உள்ளது என்ற மனப்பதிவை விட்டுச் செல்லுகிற,*

*வாய்வார்த்தைகளில் நிலையாக வைக்கப்பட்டுள்ள சாக்குப்போக்குகளாக அடிக்கடி கேட்கப்படுகிறது. பிசாசு வல்லமை நிறைந்தவனாக இருந்த போதிலும், அவன் எல்லா வல்லமையும் நிறைந்தவனாக இருப்பதில்லை என்பதை நமது வசனப்பகுதி தெளிவாக்குகிறது - அவன் நிச்சயமாகவே எதிர்த்து நிற்கப்பட இயலாதவனாக இருப்பதில்லை. நன்மை மற்றும் தீமை ஆகியவற்றின் சமானப்படுத்தப்பட்ட சக்திகள் என்ற பெர்சிய இரு மையத்துவத்தைப் போன்ற எதையும் வேதவசனங்கள் முன்வைப்பதில்லை. நாம் சேவிக்கின்ற தேவனைக் காட்டிலும் சாத்தான், எல்லையற்ற வகையில் தாழ்வானவனாக இருக்கின்றான்.*

*இவன் ஏழு தலைகளை உடையவனாக, மிகவும் சாதுரியமானவனாக இருக்கலாம்; ஆனால் இவன் தேவனை எதிர்த்து நிற்பதின் வீணான தன்மையை புரிந்து கொள்ளுவதில்லை என்பது உறுதி (12:4, 5, 7-10). இவன் எல்லாம் அறிந்தவனாக இருப்பதில்லை.*

*இவன் பத்துக் கொம்புகளைக் கொண்டிருந்து, நட்சத்திரங்களில் மூன்றில் ஒரு பகுதியைக் கீழே தள்ளக்கூடியவனாக இருக்கலாம், ஆனால் இவனால், தேவனைப் போல் எல்லா நட்சத்திரங்களையும் கீழே தள்ள இயலாது (6:13). இவன் சர்வ வல்லமை பொருந்தியவனாக இருப்பதில்லை.*

*இவன் ஏழு முடிகளைக் கொண்டிருக்கலாம், ஆனுல் இவனது அதிகாரம் தற்காலிகமானதாகவே உள்ளது. முடிவில், இயேசு ஒருவரே "அநேக கிரீடங்கள்" கொண்டவராக இருப்பார் (19:12). இவர் ஒருவரே, ஒரே "இராஜாதி இராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும்" இருப்பார் (19:16)!*

*பிசாசானவன் எங்கும் நிறைந்திருப்பான் என்று சித்தரிக்கப் படுவதில்லை என்பதை நாம் கூடுதலாகக் கூறமுடியும் (யோபு 2:2ஐக் காணவும்). இவன், மனிதகுலத்தின் நடவடிக்கைகளைக் கண்காணிப் பதற்குத் தனது உதவியாளர்களைச் (வசனங்கள் 7, 9) சார்ந்திருக்க வேண்டியுள்ளது.*

*உங்கள் விரோதியை அறியுங்கள்: இவன் வெற்றிகொள்ளப்பட முடியாதவனாக, பயப்படுத்துதல் நிறைந்தவனாகக் கூட இருக்கின்றான், கவனமுள்ளவனாகவும் இருக்கின்றுன் - ஆனால் தேவனுடைய உதவியால் இவனைத் தோல்வியுறச்செய்ய முடியும் என்பதையும் அறியுங்கள். யாக்கோபு, "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்" என்று கூறினுர் (யாக்கோபு 4:7). தேவனுக்கு உண்மையாக உள்ளவர்கள் சாத்தானை வெற்றிகொள்ளக் கூடியவர்களாக உள்ளனர் என்பதை நமது அடுத்த பாடம் வலியுறுத்தும் (வெளிப்படுத்தின விசேஷம் 12:11).*

## *ஒரு சலிப்புற்ற விரோதி (12:4-6)*

*நமது விரோதி நமக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளான், ஆனுல் இவன் நம்மை ஏன் இவ்வளவாக வெறுக்கின்றான் என்பதோ அல்லது இவன் ஏன் நமது அழிவில் இவ்வளவாக நோக்கங்கொண்டுள்ளான் என்பதோ நமக்கு இன்னமும் கூறப்படவில்லை. அடுத்த சில வசனங்கள், மிகவும் சலிப்புற்ற*

*விரோதி என்ற வகையில் இவனைச் சித்தரிக்கையில் விளக்கத்தைத் தொடங்குகின்றன.*

***சலிப்பு எண் 1 (வசனங்கள் 4, 5)***

*4ம் வசனத்தின் முடிவில், "பிரசவவேதனைப்படுகிற அந்த ஸ்திரீ பிள்ளை பெற்றவுடனே, அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப்போடும்படிக்கு அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது" (வசனம் 4ஆ) என்றுள்ளது. சாத்தான் தனது நோக்கத்தை நிறைவேற்றக்கூடாது போனதற்குக் காரணம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. பிள்ளை பிறக்கும் வேளையில், பெண்ணும் புதிதாய்ப் பிறந்த பிள்ளையும் உதவியற்றவர்களாக, இவனது இரக்கத்தைப் பெற வேண்டியிருப்பவர்களாக இருந்திருப்பார்கள். செயல்பாடு மீண்டும் தொடங்கப்படுகையில், தேவனுடைய இடைப்படுதலில் ஆச்சரியமடையத் தயாராயிருங்கள்.*

*5ம் வசனத்தின் முதற்பகுதி, பிள்ளையின் பிறப்பைப் பற்றிக் கூறி அதை அடையாளப்படுத்துகிறது: "சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால், ஆளுகைசெய்யும்[42] ஆண்பிள்ளையை அவள் பெற்றாள்" (வசனம் 5அ). மக்களினங்களை "இருப்புக்கோலால்" ஆளுகை செய்தல் என்ற குறிப்பு சங்கீதம் 2ல் இருந்து வருகிறது, இது புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்களால் அடிக்கடி இயேசுவுக்கு நடைமுறைப்படுத்தப்படுகின்ற மேசியாத்துவ சங்கீதமாக உள்ளது (அப்போஸ்தலருடைய நடபடிகள் 13:33; எபிரெயர் 1:5; 5:5). இயேசுவுக்குக் கீழ்ப்படிகின்ற யாவரும் அவரது ஆளுகையில் பங்கடைவார்கள் என்று அவர் வாக்குத்தத்தம் செய்திருந்த இடமான 2:26-28 பற்றிய நமது கலந்துரையாடலில் நாம் இந்த சங்கீதத்திற்கான முந்திய குறிப்பு ஒன்றைக் கொண்டிருந்தோம். மீண்டுமாக, 19ம் அதிகாரத்தில், இயேசுவைப் பற்றி "புறஜாதிகளை வெட்டும்படிக்கு அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது, இருப்புக்கோலால் அவர்களை அரசாளுவார் ..." என்று எழுதப்பட்டுள்ளது (வசனம் 15).[43] 12:5ல் உள்ள இந்த ஆண்பிள்ளை இயேசுவே என்பதில் சிறிதளவே சந்தேகம் இருப்பதாகக் காணப்படுகிறது.*

*ஆங்கில வேதாகமத்தில் உள்ள "a son, a male child" என்ற வழக்கத்திற்கு மாறான சொற்றொடர் அமைப்பைக் கவனியுங்கள். கிரேக்க மொழியிலும் ஆங்கில மொழியிலும் "son" என்ற வார்த்தை "ஒரு ஆண் குழந்தையை" அர்த்தப்படுத்துகிறது. கூடுதலாக, "male" என்ற வார்த்தையைச் சேர்த்துள்ள விஷயமானது மிகையானதாகத் தோன்றுகிறது, ஆனால் இது, பிறந்துள்ள ஆண்பிள்ளையின் ஆண்தன்மையை வலியுறுத்துவதற்கான எபிரெய வழிமுறையாக உள்ளது. இச்சொற்றொடரைப் பற்றி, ஆல்பெர்ட்டஸ் பியட்டெர்ஸ் என்பவர், "கொச்சைச் சொற்றொடர் ஒன்றை நாம் கடன் பெற்று அதை மொழிபெயர்த்துப் பார்த்தால், ஒரு வேளை இதன் உள்ளான அர்த்தத்தை இன்னும் அதிகமாய்ப் பெறுவோம்: 'ஒரு மகன், ஒரு அவன் - மனிதன்'! இது கிறிஸ்துவைப் பற்றிய மிகுதியான கருத்தாக, ஏறக்குறைய உக்கிரமானதாக, கிறிஸ்துவின் ஆண்மையை உறுதிப்படுத்துவதாக உள்ளது.'"[44]*

*பல நூற்றாண்டுகளுக்கு முன்னதாக, ஏசாயா தீர்க்கதரிசி "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார், கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும், அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்" என்று எழுதியிருந்தார் (ஏசாயா 9:6; 7:14ஐக் காணவும்). வெளிப்படுத்தின விசேஷம் 12:5, ஏசாயா தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றம் பற்றிய நாடகத்துவமான பின்னோக்கித்திரும்பும் நிகழ்ச்சியொன்றை நமக்குத் தருகிறது. இது நமக்கு, வானவியல் மறைகருத்துக்களுடன் கூடியதான இயேசுவின் பிறப்பைப் பற்றி நினைவூட்டுகிறது.[45]*

*அந்தப் பிள்ளை பிறந்தவுடன் அதைப் பட்சிப்பதற்கு வலுசர்ப்பம் தயாராக இருப்பதை நாம் நினைக்கையில், ஏரோது பெத்லகேமில் பிள்ளைகளைக் கொலைசெய்வித்தது நமக்கு நினைவிற்கு வருகிறது (மத்தேயு 2:16). இந்தத் துன்மார்க்கச் செயலுக்குப் பின்னால் வலுசர்ப்பம்/பொல்லாங்கு இருந்தது என்பதை யாரால் சந்தேகப்பட முடியும்? இருப்பினும், இந்த ஆண்பிள்ளையை அழிப்பதற்கான பிசாசின் முயற்சிகளை நாம் அந்த ஒரு கொலைநிகழ்ச்சியுடன் குறுகலாகத் சிந்தித்து விட்டுவிட முடியாது. இயேசுவின் பூமிக்குரிய ஊழியம் முழுவதிலும் அவரைச் சாத்தான் அழித்துவிடத் தொடர்ந்து முயற்சி செய்தான் (மத்தேயு 4:1; 16:23; லூக்கா 22:3, 31). பிசாசின் முயற்சிகள் இயேசுவின் மரணத்தில்தான் உச்சநிலையை அடையச் செய்தது (லூக்கா 22:53).[46]*

*சாத்தான் வெற்றி நிறைந்தவனாய் இருந்தானா? இவனது முயற்சியின் வீண்தன்மையானது வார்த்தைகளின் சிக்கனமான பயன்பாட்டில் சித்தரிக்கப்படுகிறது: "அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டது'' (வசனம் 5ஆ). ''எடுத்துக்கொள்ளப்பட்டது'' என்பது, ''பிடிக்கப்பட்டது'' என்று அர்த்தப்படுகிற கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது, இது திடீரென்று எதிர்பாராத வகையில் நடைபெற்ற நிகழ்ச்சி என்று மறைமுகமாய் உணர்த்துகிறது. யூஜீன் பீட்டர்ஸன் என்பவர், இக்காட்சியைப் பின்வருமாறு விவரித்தார்: "பிள்ளை தோன்றிய உடனே, வலுசர்ப்பம் சடாரென்று முன்தாவுகிறது. நாம் கொடுமையின் காட்சியைக் காண மிகவும் பயந்து, நம் கண்களை மூடிக்கொள்ளுகின்றோம். பின்பு சாத்தியக்கூறான கடைசி வேளையில், பாதுகாப்பு ஏற்படுகிறது. பச்சிளம் குழந்தை பிடிக்கப்பட்டு தேவனுடைய அரியணைக்கு உயர்த்தப்படுகிறது."[47]*

*பின்பு எடுத்துரைப்பு இயேசுவின் பிறப்பில் இருந்து பரத்துக்கேறுதல் நோக்கி விரைவாகத் தாவுகிறது.*

> *யோவான் தமது எழுதுகோலின் இந்தச் சில வீச்சுகளில், தேவகுமாரன் மாம்சத்தினுள் பிரவேசித்ததில் இருந்து அவரது பரத்துக்கேறுதல் வரையில் உள்ள வழி யாவற்றையும் கடந்து செல்கின்றார். அதை அவர் செய்தது சரியே, ஏனெனில் பூமியின்மீது இயேசுவின் வாழ்வு பற்றிய விரிவான விபரத்தை தருதல் என்பது,*

வெளிப்படுத்தின விசேஷத்தை அவர் எழுதியதற்கான நோக்கமாய் இருக்கவில்லை. அதை அவர் ஏற்கனவே தமது சுவிசேஷ நூலில் செய்திருந்தார்.[48]

வார்ரென் வயர்ஸ்ப் என்பவர், பின்வரும் நகைச்சுவையான சிந்தனையைக் கூட்டினார்: "இவ்வசனத்தின் மத்தியில் வரும் காற்புள்ளி வரலாற்றின் முப்பத்து மூன்று ஆண்டுகளைக் குறிக்கிறது!"[49]

***சலிப்பு எண். 2 (வசனம் 6)***

*இந்தப் பிள்ளையானது வலுசர்ப்பத்தின் பிடியில் இருந்து தப்பிப்பது சாத்தியமற்றதாகக் காணப்பட்டிருந்தாலும், அது தப்பித்திருந்தது! சலிப்புற்ற இந்தப் பெருமிருகமானது பெண்ணை நோக்கித் தனது கவனத்தைத் திருப்பிற்று (12:13). பெருமிருகத்தின் பலத்துடன் ஒப்பிடுகையில் இவள் எவ்வளவு பலவீனமாகத் தோன்றினாள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இவளை ஒழித்துப்போடுதல் என்பது இந்த மிருகத்திற்குத் சுலபமான பணிப்பொறுப்பாய் இருந்திருக்க வேண்டும்; இருப்பினும் மிருகம் மீண்டும் தோற்கடிக்கப்பட்டது: "ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள், அங்கே ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் அவளைப் போஷிப்பதற்காகத்[50] தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது" (வசனம் 6).*

*நாம் 12:14ம் வசனத்தை அடையும்போது "வனாந்தரம்" என்பதைப் பற்றி கலந்துரையாடுவோம்.[51] இப்போதைக்கு, அது "தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம்" என்பதைக் கவனியுங்கள். தேவன் தமது குமாரனைப் பாதுகாத்தது போலவே, அவர் தமது சபையையும் பாதுகாக்கின்றார். ஒரு விசேஷித்த "இடத்தில்" தேவன் தமது மக்களை "ஆயிரத்திருநூற்றறுபதுநாளளவும்" பராமரித்துப் பாதுகாத்தார். (நீங்கள், "ஆயிரத்திருநூற்றறுபதுநாளளவும்" என்பதை, சோதனைகள், கடினமான வேளைகள் மற்றும் பரீட்சிக்கப்படுதல் ஆகியவற்றுடன் இணைவுகொண்டுள்ள - நாளைக்கான நம்பிக்கை உண்டு என்பதை மறைவாக உணர்த்துகிற - "$3^1/_2$ஆண்டுகள்" என்ற அடையாளத்துவ மொழிநடை என்று உணர்ந்து அறிவீர்கள்.[52])*

*1 முதல் 6வரையுள்ள வசனங்களை எளிமையான சொற்றொடரில் இடுவதென்றால், வலுசர்ப்பம் தான் செய்ய முயற்சித்த ஒவ்வொரு செயலிலும் சலிப்புற்றது. இவன் திட்டமிட்டபடி எதுவும் நடைபெறவில்லை. இவனது சலிப்பு அதிகரிக்கையில் இவனது உக்கிரகோபம் குவிந்தெழும்பிற்று.*

## *சீற்றமிகுந்த விரோதி (12:7-17)*

*நமது அடுத்த பாடத்தில் நாம், வலுசர்ப்பமானது "வானத்தில் நடந்த யுத்தத்தில்" (வசனம் 7) தோல்வி அடைந்ததைக் காண்போம். இது இவனது சலிப்பு சீற்றத்தை அதிகமாக்கும். இவ்விதமாக, 12ம் அதிகாரத்தின் கடைசி வசனம், "அப்பொழுது வலுசர்ப்பமானது ... கோபங்கொண்டு ..." என்று*

*கூறுகிறது (வசனம் 17அ). இது பிசாசானவன் உங்களை வெறுப்பதும் உங்களை அழிக்க முயற்சிப்பதும் ஏன் என்பதை விளக்குவதற்கு இன்றியமையாத பாகமாக உள்ளது. இவன் யாரேனும் சிலரை இடித்துத் தாக்குவதற்குக் கண்ணோக்கும் உக்கிரகோபமான எருதுபோல் இருக்கின்றான்.*

## *முடிவுரை*

*அந்தக் கலந்துரையாடலின் எஞ்சிய பகுதியை நாம், இனிவரும் பாடங்களுக்கென்று விட்டு வைப்போம். நமது விரோதி பற்றிய சிறு சித்திரம் ஒன்றை அளித்தல் என்பதே இந்த எடுத்துரைப்பில் நமது முதன்மையான நோக்கமாக இருந்துள்ளது. தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள், தங்களின் இடர்ப்பாட்டிற்கு உண்மையில் ரோமாபுரியல்ல ஆனால் சாத்தானே காரணமாய் இருந்தான் என்பதை அறிவது அவசியமாய் இருந்தது. நீங்களும் நானும், நாம் எதிர்கொள்ளும் சோதனைகள் எதுவாக இருந்தாலும், அவற்றின் பின்னாக இருந்து அவற்றை உந்தித்தள்ளும் சக்தியாக இருப்பவன் சாத்தானே என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.*

*நாம் நமது விரோதியை இலேசாக நடத்தாது இருப்போமாக. இவன் வெற்றிகொள்ளப்பட முடியாதவனாக இருக்கின்றான். அதே வேளையில், இவன் நம்மைப் பயமுறுத்த இவனை நாம் அனுமதித்து விடக்கூடாது. தேவன் ஆண்குழந்தைக்கும் பெண்ணுக்கும் உதவினார், நாம் அவரிடத்தில் நெருங்கி நின்று, அவரில் நம்பிக்கை கொண்டிருந்தால் அவர் நமக்கும் உதவுவார். முன்பு நான், "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" என்ற யாக்கோபு 4:7ன் கடைசிப் பகுதியை மேற்கோள் காண்பித்தேன். இவ்வசனத்தின் முதல் பகுதியானது அந்த எதிர்த்து நிற்குதலுக்கான திறவுகோலை வெளிப்படுத்துகிறது: ''ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்.'' பவுல், ''பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்" என்று கூறினார் (எபேசியர் 4:27). நாம் நமது சொந்த பலத்தைச் சாராது, கர்த்தருடைய பலத்தைச் சார்ந்திருந்தால் (எபேசியர் 6:10), அந்தக் கட்டளைக்கு கீழ்ப்படிய முடியும்.*

*எனவே, "நீங்கள் கர்த்தரிடம் எவ்வளவு நெருங்கியிருக்கிறீர்கள்?'' என்பதே இந்த வேளைக்கான கேள்வியாக உள்ளது. நீங்கள் ஒருக்காலும் அவரை ஏற்றுக்கொள்ளாதிருந்தால், அல்லது நீங்கள் அவரை விட்டுப் புறம்பே அலைந்து கொண்டிருந்தால், அவர் உங்களை "தீமையில் இருந்து இரட்சிக்கும்"படி (மத்தேயு 6:13) அவரிடத்திற்குத் திரும்புவதற்கு இதுவே வேளையாக உள்ளது.*[53]


---

## போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

*12ம் அதிகாரத்தில் உள்ள பெண்ணின் இயற்கையான அழகு, 17ம் அதிகாரத்தில் உள்ள வேசியின் செயற்கையான மினுமினுப்புடன் நேர்மாறாக ஒப்பிடப்படலாம். இந்த நேர்மாறை முக்கியத்துவப்படுத்துகிற*

*வரைவட்டவணை ஒன்றைத் தயார் செய்ய நீங்கள் விரும்பலாம். அதை நீங்கள் தொடங்குவதற்கு இங்கே சில கருத்துக்கள் தரப்படுகின்றன: (1) (12ம் அதிகாரத்தில் வரும்) முதல் பெண் ஒளியில் வாழ்கின்றாள்; (17ம் அதிகாரத்தில் உள்ள) இரண்டாவது பெண் இருளில் வாழ்கிறாள். (2) முதல் பெண் வானத்திற்கு உரியவளாய் இருக்கின்றாள்; இரண்டாவது பெண் பூமிக்கு உரியவளாக இருக்கின்றாள். (3) முதல் பெண் வேதனையில் துடிக்கின்றாள்; இரண்டாவது பெண் மதுபானம் அருந்தியிருக்கின்றாள். (4) முதல் பெண், வேதசாட்சிகளாக மரித்தவர்களுக்குத் தாயாக இருக்கின்றாள்; இரண்டாவது பெண் வேசிகளுக்கெல்லாம் தாயாக இருக்கின்றாள். (5) முதல் பெண் நன்மையை உண்டாக்குகின்றாள்; இரண்டாவது பெண் தீமையை உண்டாக்குகின்றாள். (6) முதல் பெண் பொல்லாங்கினால் வேட்டையாடப்படுகின்றாள்; இரண்டாவது பெண் தீமையுடன் அணிவகுத்து நிற்கின்றாள். (7) முதல் பெண் உதவியற்றவளாக இருப்பதாகக் காணப்பட்டபோதும், உயிர்ப்பிழைத்திருக்கின்றாள்; இரண்டாவது பெண் வல்லமை நிறைந்தவளாக இருப்பதாகக் காணப்பட்டபோதும், அழிக்கப்படுகின்றாள்.*

*வரையும் திறமை உங்களுக்கு இருந்தால், நீங்கள் போதிக்கும்போது சில காட்சிகளைக் கரும்பலகையில் வரைவதை நீங்கள் விரும்பித் தேர்ந்து கொள்ளலாம். இந்தப் பாடத்தில் காணப்படுகின்ற, ஆஸ்திரேலியாவில் என் மாணவர் ஒருவரால் வரையப்பட்டதான, 12ம் அதிகாரத்தின் தொடக்க வசனத்திற்கான ஒரு எளிய படத்தைக் கீழே காணுங்கள்.*




*"ஒரு ஸ்திரீ, ஒரு வலுசர்ப்பம் மற்றும் ஒரு பிள்ளை" என்பது இந்தப் பாடத்திற்கான மிகவும் பொதுவான தலைப்பாக உள்ளது, இதில் சொற்றொடர்கள் பல்வேறு முறைகளில் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. "பூமி*

*என்ற கோளின்மீது நன்றாக வாழுதல்" என்பது 12ம் அதிகாரத்திற்கான சாத்தியக்கூறுள்ள தலைப்பாக இருக்கலாம், இது பிசாசைக் குறிப்பிடுவதாக உள்ளது. "பொதுஜன விரோதி எண். 1" அல்லது "கிறிஸ்தவர்களின் விரோதி எண். 1" என்ற சொற்றொடரையும் நீங்கள் பயன்படுத்தலாம்.*

*12ம் அதிகாரத்தை வெஸ்ட் என்பவர், "சமான நிலையில் அடைவிடம்" என்று அழைத்திருக்கையில், இது "பெரிய சித்தரிப்பை" தருகிறது என்று இராபர்ட் முல்ஹாலன்டு கூறினார். மற்றவர்கள் இதை, ''நமது கண்ணோக்கிற்கு அப்பால் ஆவிக்குரிய போராட்டம்'' அல்லது ''திரைகளுக்குப் பின்னால் யுத்தம்'' என்று குறிப்பிட்டுள்ளனர். இந்த அதிகாரம் "ஆவிக்குரிய நாடகம் ஒன்றை" முன்வைக்கிறது என்று மிகாயில் வில்காக் கூறினார். அந்த அணுகுமுறையைப் பயன்படுத்தி, நீங்கள் இந்த அதிகாரத்திற்குப் பின்வரும் பிரிவுகளை ஏற்படுத்தலாம்: (1) கதா பாத்திரங்கள் (வசனங்கள் 1-3, 5); (2) சூழ்ச்சி (சதி) (வசனங்கள் 1-6); (3) நாடகம் (வசனங்கள் 7-16); முன்னுரை (வசனம் 17).*

*வயர்ஸ்ப் என்பவர், 12 மற்றும் 13ம் அதிகாரங்களை "பயங்கரமான முக்காட்சி" என்ற தலைப்பின் கீழ் எடுத்துரைத்து முடித்தார்.*

*காலங்கள்தோறும் மேசியா இவ்வுலகிற்கு வருவதைத் தடைசெய்வதற்கு பிசாசானவனின் முயற்சிகள் பற்றிய வில்லியம் ஹென்றிக்ஸெனின் குறிப்புகள் ஒரு பிரசங்கமாகப் பயன்படக்கூடும்.*[54]

---

*குறிப்புகள்*

[1]*வெளிப்படுத்தின புத்தகத்தில் இந்த வார்த்தை, தேவனிடத்திலிருந்து வரும் விசேஷித்த வெளிப்படுத்துதலைக் குறிப்பிடுவதற்கு மூன்று முறைகளும் (12:1, 3; 15:1), சாத்தானால் செயல்படுத்தப்பட்ட வஞ்சிக்கும் அடையாளங்களைக் குறிப்பதற்கு நான்கு முறைகளும் (13:13, 14; 16:14; 19:20) பயன்படுத்தப்பட்டுள்ளது. யோவான் சுவிசேஷத்திலும் வெளிப்படுத்தின புத்தகத்திலும் இவ்வார்த்தை விரிவாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்ற உண்மையானது, இறைவெளிப்பாட்டு நூலை யோவான்தான் எழுதினார் என்பதற்கு இன்னொரு குறிப்பாக உள்ளது.* [2]These definitive terms were adapted from W. B. West Jr., *Revelation Through First-Century Glasses,* ed. Bob Prichard (Nashville: Gospel Advocate Co., 1997), 85, and from C. G. Wilke and Wilibald Grimm, "*semeion,*" *A Greek - English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph H. Thayer (Edinburgh, Scotland: T. & T. Clark, 1901; reprint, Grand Rapids, Mich.: Regency Reference Library, n.d.), 573. [3]West, 87. William Barclay, in *The Revelation of John*, vol. 2, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Wesminster Press, 1976), 74. *உட்பட, பல மொழிபெயர்ப்புகளில், வசனம் 1ல்* "heaven" *(பரலோகம்) என்பது* "sky" *(ஆகாயம்) என்று தரவழைக்கப்பட்டுள்ளது.* [4]This sentence was adapted from Martin Kiddle, *The Revelation of St. John,* The Moffatt New Testament Commentary Series (New York: Harper & Brothers Publishers, 1940), 219, and G. B. Caird, *A Commentary on the Revelation of St. John the Divine* (London: Adam & Charles Black, 1966), 149. [5]*எடுத்துக்காட்டாக, வேதவசனங்கள் தேவனை சூரியனுக்கு ஒப்பிடுகின்றன (சங்கீதம் 84:11); மற்றும் வெளிப்படுத்தின விசேஷத்தில், இயேசுவின் முகம் சூரியனைப் போல் பிரகாசிக்கிறது (1:16). இவ்விதமாக இந்தப் பெண், தேவனுடனும்*

இயேசுவுடனும் ஒரு விசேஷித்த உறவுமுறை கொண்டிருக்கின்றாள். ஆர்வமிக்க ஒரு விளக்கமானது, பிதாக்களின் யுகத்தை நட்சத்திரங்களுடனும் யூதர்களின் யுகத்தைச் சந்திரனுடனும், கிறிஸ்தவ யுகத்தைச் சூரியனுடனும் ஒப்பிடுகிறது. "மிகவும் அதிகமான விளக்கங்கள் என்பவை, மிகவும் கொஞ்சமான விளக்கங்களைப் போலவே அபாயகரமானவைகளாக இருக்கக் கூடும்" (Earl Palmer, *1, 2, 3 John & Revelation,* The Communicator's Commentary Series, vol. 12 [Dallas: Word Publishing, 1982], 199). இருந்தபோதிலும் இரண்டு விபரங்கள் தனிச்சிறப்புடையவைகளாகக் காணப்படுகின்றன: (1) இந்தப் பெண் அணிந்திருந்த கிரீடம் வெற்றியின் கிரீடமான *stephanos* என்பதாக இருந்தது. (2) "பன்னிரண்டு" என்ற எண் முழுமைத்துவம் என்ற கருத்தைக் கொண்டிருந்தது. (இந்தப்பாடத்தில் பன்னிரண்டு நட்சத்திரங்களைப் பற்றிய குறிப்பிடுதலில் காணவும்.) [6]இந்தப் பாடக்கருத்துக்களை நீங்கள் ஒரு வகுப்பறையில் பயன்படுத்தினால், நீங்கள் இவ்விடத்தில் நிறுத்தி, உங்கள் வகுப்பில் உள்ளவர்கள் பெறுகின்ற முழுமையான மனப்பதிவு என்ன என்று கேட்க விரும்பலாம். [7]This description was adapted, in part, from Eugene H. Peterson, *Reversed Thunder* (San Francisco: HarperCollins Publishers, 1988), 119. [8]பிற்பாடு இந்த அதிகாரத்தின் கடைசிப் பகுதியில் நாம், இந்தப் பெண் சபையாக இருக்கின்றாள் என்று கருத்துத் தெரிவிப்போம். இந்தச் சாத்தியக்கூறானது, சபை என்பது உலகத்தின் கண்ணோக்கில் ஈர்ப்பற்றதாகவும் தேவனுடைய கண்ணோக்கில் அழகு மிகுந்ததாகவும் இருந்தது என்று விளக்கம் அளிக்கும்படிப் பல எழுத்தாளர்களைத் தூண்டியுள்ளது. [9]Myer Pearlman, *Windows Into the Future: Devotional Studies in the Book of Revelation* (Springfield, Mo.: Gospel Publishing House, 1941), 99. [10]யுகங்களில், ஏவாள், நபர்த்துவப்படுத்தப்பட்ட ஞானம், பரிசுத்த ஆவியானவர் மற்றும் தேவன் ஆகியவர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

[11]G. R. Beasley-Murray, *The Book of Revelation,* The New Century Bible Commentary Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1974), 198. கத்தோலிக்க இல்லங்கள் பலவற்றில், வெளிப்படுத்தின விசேஷம் 12:1ன் அடையாளத்துவத்தைப் பிரதிபலிக்கும் வகையிலான மரியாளின் சித்திரங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. [12]Gilles Quispel, *The Secret Book of Revelation* (New York: McGraw-Hill Book Co., 1979), 77. [13]"வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் "புயலின் மையத்தில் அமைதி" என்ற பாடத்தில் காணவும். [14]Leon Morris, *Revelation,* rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987). 153. [15]Edward P. Myers, *After These Things I Saw: A Study of Revelation* (Joplin, Mo.: College Press Publishing Co., 1997), 216. [16]Bruce M. Metzger, *Breaking the Code: Understanding the Book of Revelation* (Nashville: Abingdon Press, 1993), 74. [17]The last words of this sentence were adapted from Peterson, 120. [18]"மூன்றில் ஒரு பங்கு" என்ற பின்னத்தின் தனிச்சிறப்புப் பற்றி, "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன" என்ற பாடத்தில் காணவும். மேலும் இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் உள்ள "தேவனுடைய எழுப்புதல் அழைப்பு" என்ற பாடத்தில் "மூன்றில் ஒரு பங்கு" என்பதற்கான விளக்கத்திலும் காணவும். [19]வசனம் 9ல் இவன் *சர்ப்பம்* என்று அழைக்கப்படுகின்றான், மற்றும் வசனம் 4ல் இவன் *நின்றான்.* [20]இது பொதுவாக, முதல் மிருகத்தின் தொடர்புடைய ஏழு தலைகள், பத்து கொம்புகள் மற்றும் பிற குணங்களைக் குறிப்பிடுவதால் செய்யப்படுகிறது. வலுசர்ப்பமும் முதல் மிருகமும் பல அம்சங்களைப் பொதுவானவைகளாகக் கொண்டிருக்கையில், மிருகத்திடம் இருந்து முடிவுகளைத் தரவழைத்து பின்பு அவற்றை வலுசர்ப்பத்திற்கு நடைமுறைப் படுத்தும்படியான குறிப்பு எதுவும் இல்லை. நமது குறிப்பை யோவானிடமிருந்து நாம்

*எடுத்துக்கொண்டு, முதல் மிருகத்தின் தலைகள் மற்றும் கொம்புகள் ஆகியவற்றைப் பற்றிய நமது படிப்பில் தலைகள் மற்றும் கொம்புகள் ஆகியவற்றைப் பற்றி கலந்துரையாடலை விட்டுவிடுவோம்.*

[21]*நீங்கள் இந்தப்பாடக்கருத்துக்களை ஒரு வகுப்பில் பயன்படுத்தினால், வசனம் 3 மற்றும் 4ல் சித்தரிக்கப்பட்டுள்ள வகையில் வலுசர்ப்பம் பற்றி மாணவர்கள் கொண்டுள்ள முழுமையான மனப்பதிவு என்ன என்று கேட்க விரும்பலாம்.* [22]*பழைய ஏற்பாட்டில் ''வலுசர்ப்பம்'' என்ற வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ளதற்கான இரண்டு உதாரணங்களுக்கு, ஏசாயா 27:1; 51:9 ஆகிய வசனங்களைக் காணவும். புதிய ஏற்பாட்டில் 'வெளிப்படுத்தின விசேஷத்தில்' மாத்திரமே "வலுசர்ப்பம்" என்ற வார்த்தை காணப்படுகிறது.* [23]Rubel Shelly, *The Lamb and His Enemies: Understanding the Book of Revelation* (Nashville: 20th Century Christian Foundation, 1983), 71. [24]*"ஏழு" என்ற எண்ணின் அடையாளத்துவ முக்கியத்திற்கு, ''வெளிப்படுத்தின விசேஷம், 1'' என்ற புத்தகத்தில் "இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன!" என்ற பாடத்தில் காணவும். இது ஒரு அடையாளத்துவமாக மாத்திரம் உள்ளது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும். 16:13ல் வலுசர்ப்பமானது - ஏழு தலைகளைக் கொண்டுள்ளது என்ற உண்மை இருந்தபோதிலும் - ஒரு வாயைக் கொண்டுள்ளது என்று குறிப்பிடப்படும்!* [25]*சர்ப்பத்தின் தலை என்பது மனோரீதியான வலிமை என்பதை விட அதிகாரத்துவத்தைக் குறிக்கிறது என்று சிலர் நினைக்கின்றனர்.* [26]*கிரேக்கப் புராணத்தில் உள்ள பலதலைகளைக் கொண்ட ஹைடிரா என்ற பெரும் மிருகம், கொலைசெய்யப்பட மிகவும் கடினமானதாக இருந்தது. அதன் ஒரு தலை கொல்லப்பட்ட உடனே, இன்னொரு தலை தாக்குதலைத் தொடுக்கும்.* [27]*''பத்து'' என்ற எண்ணின் அடையாளத்துவ முக்கியத்துவத்திற்கு, "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் உள்ள "இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன!" என்ற பாடத்தில் காணவும். கேள்வி: பத்துக் கொம்புகளை ஏழு தலைகளில் நீங்கள் எவ்வாறு பொருத்துவீர்கள்? பதில்: நீங்கள் விரும்பும் எந்த வகையிலும் - ஏனென்றால் அது பொருட்படுத்தப்பட வேண்டியதாக இருப்பதில்லை. இது யாவும் அடையாளத்துவமாகவே உள்ளது.* [28]*ஆட்டுக்குட்டியானவரின் ஏழு கொம்புகள் பற்றிய விளக்கங்களுக்கு "வெளிப்படுத்தின விசேஷம், 2" என்ற புத்தகத்தில் உள்ள "ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கிறார்'' என்ற பாடத்தில் காணவும். ஆட்டுக்குட்டியானவரின் பலமும், வலுசர்ப்பத்தின் பலமும் மாறுபட்டவைகளாக உள்ளன: ''ஆட்டுக்குட்டியானவரின் பலம் அவரது இயல்பிலேயே சுதந்தரித்துக் கொள்ளபட்டதாக, நிலையானதாக உள்ளது; வலுசர்ப்பத்தின் பலம், இவனுக்குத் தேவன் அனுமதித்துள்ளதாகவும் தற்காலிகமானதாகவும் உள்ளது.''* [29]KJV *வேதாகமத்தில் இவ்விடத்தில்* "crowns" *என்று மாத்திரமே உள்ளது.* "Diadem" *என்ற வார்த்தை புதியஏற்பாடு முழுவதிலும் மூன்று முறைகள் மாத்திரமே வருகிறது, இவை யாவும் வெளிப்படுத்தின புத்தகத்திலேயே உள்ளன: 12:3; 13:1; 19:12.* [30]*மத்தேயு 12:24; யோவான் 12:31; 14:30; 16:11; எபேசியர் 2:2 ஆகிய வசனங்களில் பிசாசைப் பற்றி விவரிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்றொடர்களைக் காணவும்.*

[31]Metzger, 73. [32]*இந்தச் செய்கையில் சிலர், சாத்தானுடைய வல்லமையை செல்வாக்கு மிகுந்த தனிநபர்களின்மீது காணுகின்றனர். மற்றவர்களோ, இது பிசாசானவன் தேவனுக்கு எதிராக கலகம் செய்தபோது மற்ற தூதர்களை வழிவிலக்கி நடத்திச் சென்றதைக் குறிப்பிடுகிறது என்று நினைக்கின்றனர்.* [33]Morris, 154. [34]*பிள்ளை பிறக்கும் முன்பாகவே வலுசர்ப்பம் இந்தப் பெண்ணைப் பட்சித்துப்போடாதது ஏன் என்று சிலர் வியப்படைகின்றனர், அந்தச் செயலும்*

*அதே நோக்கத்தை நிறைவேற்றுவதாக இருந்திருக்குமே. அது 12ம் அதிகாரத்தின் அடையாளத்துவ எல்லைக்கு வெளியில் உள்ளதாகும், ஆனுல் உண்மையில் பிசாசானவன் இந்தப் பெண்ணை (இஸ்ரவேல் மக்களினத்தை)மேசியாவை உண்டாக்குவதில் இருந்து பலமுறை தடை செய்ய முயற்சித்தான். (1 சாமுவேல் 19:1; 2 இராஜாக்கள் 11:1, 2; எஸ்தர் 3:13 ஆகிய வசனங்களைக் காணவும்.) அந்த சூழ்ச்சி தவறிப்போயிருந்ததால், மேசியாவையே அழித்தல் என்பது சாத்தானின் "இரண்டாவது திட்டமாக" இருந்தது.* [35]Frank Pack, *Revelation*, Part 2, The Living Word Series (Austin, Tex.: R. B. Sweet Co., 1965), 4. [36]*ஆதியாகமம் 3ல் சர்ப்பம் என்பது, சாத்தானால் பயன்படுத்தப்பட்டதாக அல்லது சர்ப்பத்தின் வடிவத்தை எடுத்து வந்த சாத்தானாகவே கூட இருந்திருக்கலாம்.* [37]*பெரும்பாலான மொழிபெயர்ப்புகளில் "பிசாசு" என்பது ஒரு பொதுப்பெயர்ச்சொல்லாகக் கையாளப்பட்டிருக்கையில் "'சாத்தான்" என்பது ஒரு தகுதிப்பெயர்ச் சொல்லாகக் கையாளப்பட்டுள்ளது. இந்தக் கையாளுதல்களில் உள்ள வேறுபாடு குறிப்படத்தக்கதாக இருப்பதில்லை.* [38]Merrill C. Tenney, *Proclaiming the New Testament: The Book of Revelation* (Grand Rapids, Mich.: Baker Book House, 1963), 27, 63. [39]*அடுத்தபாடத்தில் நாம், சிலுவையில் (இயேசு மரித்த காலத்தில்) இருந்து சாத்தான், "சகோதரர்களைக் குற்றப்படுத்தும்" தனது திறனில் எவ்வாறு மட்டுப்படுத்தப்பட்டுள்ளான் என்பதைக் காண்போம்.* [40]*மூலத்தில் இவ்வார்த்தையானது எந்த ஒரு எதிராளியைக் குறிப்பதற்கும் பொதுவான வகையில் பயன்படுத்தப்பட்டது. (இவ்வார்த்தை இதன் தொடக்கக் கருத்தில், எண்ணாகமம் 22:22; 1 சாமுவேல் 29:4; 1 இராஜாக்கள் 5:4; 11:14, 23 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.) நிறைவாக இது மனிதகுலத்தின் மாபெரும் எதிராளியானவனுக்கு எல்லைக்குட்பட்ட வகையில் கருத்தாயமைந்து, ஒரு தகுதிப் பெயர்ச்சொல்லானது.*

[41]Palmer, 188. [42]*"ஆளுகை செய்யும்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை "மேய்ப்பன்" என்பதற்கான வார்த்தையாக உள்ளது. இதற்கு சங்கீதம் 23 ஒரு நல்ல விளக்கவுரையாக இருக்கலாம்: மேய்ப்பர்கள் தங்கள் கீழ் இருந்தவற்றைப் பேணிப் பாதுகாத்தனர், ஆனால் அவர்களின் மந்தைகளுக்குத் துன்பம் தருபவர்களிடத்தில் அவர்கள் இரக்கமற்றவர்களாய் இருந்தனர். மந்தையின் விரோதிகளைத் தண்டித்தல் என்பதே இரும்புகோலின் நோக்கமாக இருந்தது என்பது உறுதி.* [43]*நாம் சங்கீதம் 2ஐப் பற்றிய ஒரு குறிப்பை முன்னதாக, 11:18ல் கொண்டிருந்தோம். அவ்வசனத்தின் மீதான குறிப்புகளை "கடைசி எக்காளம்" என்ற பாடத்தில் காணவும். விசேஷமாக, சங்கீதம் 2ன் பின்னணியைத் தருகிற குறிப்பை மறுகண்ணோட்டமிடவும்.* [44]Albertus Pieters, *Studies in the Revelation of St. John* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1954), 159. [45]*வெளிப்படுத்தின விசேஷம் 12ல் உள்ள "பிறப்பு" என்பது இயேசுவின் மாம்சப்பிரகாரமான தோற்றம் அல்ல, ஆனால் அவர் முடி சூடப்படுதல் என்று சிலர் நம்புகின்றனர். இந்த விளக்கமானது சங்கீதம் 2, ரோமர் 1:4 மற்றும் தொடர்புடைய பிற வசனப்பகுதிகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. இந்த விளக்கம் இவ்வசனப்பகுதியை இடர்ப்படுத்துவதில்லை, இது சரியானதாக இருக்கலாம், ஆனால் இயேசுவின் மாம்சப்பிரகாரமான பிறப்பு என்பது வெகு இயல்பான விளக்கமாக உள்ளது.* [46]*நமது அடுத்த பாடத்தில் நாம், சிலுவையில் ஆவிக்குரிய யுத்தம் பற்றிக் கலந்துரையாடுவோம்.* [47]Peterson, 120. [48]Shelly, 72. [49]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary*, vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 602, KJV *வேதாகமத்தில் இவ்விடத்தில் அரைப்புள்ளிக்குப் பதில் காற்புள்ளி உள்ளது.* [50]*கிரேக்க வசனத்தில்* "in order that there *they* might nourish her" *என்று காணப்படுகிறது. அந்த* "they" *என்பவர்கள் யார் என்று நமக்குக் கூறப்படவில்லை, ஆனுல்* "they" *என்பவர்கள்*

இந்தப் பெண்ணைப் பராமரிக்கும்படி, தேவனிடத்திலிருந்து கட்டளை பெற்றவர்களாய் இருந்திருக்கலாம்.

[51]இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியில் உள்ள "யுத்தம் ஒன்று நடக்கிறது!" என்ற பாடத்தில் காணவும். [52]இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியில் உள்ள "யுத்தம் ஒன்று நடக்கிறது!" என்ற பாடத்திலும் இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் உள்ள "தேவனுடைய சாட்சிகள்" என்ற பாடத்தில் "$3^1/_2$" ஆண்டுகள் என்பது பற்றிக் காணப்படும் கலந்துரையாடலைக் காணவும். [53]இந்தப் பாடம், பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், கிறிஸ்தவரல்வாதவர்களும் தவறு செய்கின்ற கிறிஸ்தவர்களும் கர்த்தரிடத்தில் வருவது எப்படி என்பதைக் கூற நீங்கள் விரும்புவீர்கள். உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு, ஒருவர் கிறிஸ்தவராவது எவ்வாறு (மாற்கு 16:16; நடபடிகள் 2:38; கலாத்தியர் 3:26, 27) என்றும் தேவனுடைய பிள்ளையாயிருந்து தவறு செய்கின்றனர் மீளக் கட்டுவிக்கப்படுவது எவ்வாறு (நடபடிகள் 8:22; யாக்கோபு 5:16; 1 யோவான் 1:9) என்றும் நினைவூட்டி, கர்த்தருடைய வருகைக்குத் தயாராவது எவ்வாறு என்பதைக் கூற விரும்புவீர்கள்.
[54]William Hendriksen, *More Than Conquerors*, 7th ed. (Grand Rapids, Mich.: Baker Book House, 1954), 165-70.

---

# மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. 12முதல் 14வரையுள்ள அதிகாரங்களில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள விரோதிகளின் பட்டியலை மறுகண்ணோட்டமிடவும். இவர்களில் 12ம் அதிகாரத்தில் அறிமுகப்படுத்தப்படுவது யார்?
2. நீங்கள் 12:1, 2ஐ வாசிக்கையில், பெண்ணைப் பற்றிய உங்கள் முற்றான மனப்பதிவு என்ன?
3. பெண்ணுக்குச் சாத்தியக்கூறான சில அடையாளத்துவங்களைப் பட்டியலிடவும். இவற்றில் உங்களுக்கு விருப்பமானது எது?
4. நீங்கள் 12:3, 4ஐ வாசிக்கையில், வலுசர்ப்பத்தைப் பற்றிய உங்கள் முற்றான மனப்பதிவு என்ன?
5. வலுசர்ப்பம் யாரைக் குறிக்கிறது?
6. வலுசர்ப்பத்தைக் குறித்த ஒவ்வொரு விபரமும், மரணத்திற்கு ஏதுவான இந்த விரோதியைப் பற்றிய முற்றான மனப்பதிவுக்கு விஷயங்களை எவ்வாறு கூட்டுகிறது?
7. வசனம் 9ல் வலுசர்ப்பத்தைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டுள்ள பெயர்களையும் விவரிப்புச் சொற்றொடர்களையும் பட்டியலிடவும் - மற்றும் அவை ஒவ்வொன்றின் அர்த்தத்தையும் தரவும். இவை ஒவ்வொன்றும் பிசாசின் குணம் மற்றும் வேலை ஆகியவற்றைப் பற்றிக் கூறுவது என்ன?
8. பிசாசானவனைக் குறைவாக மதிப்பிடுதல் அபாயகரமானதாக உள்ளது என்பது ஏன்? பிசாசானவனை அதிகமாக மதிப்பிடுதல் அபாயகரமானதாக உள்ளது ஏன்?

9. *5ம் வசனத்தில் கூறப்படும் ஆண்பிள்ளை யார்?*
10. *வலுசர்ப்பத்தால் அந்தப் பிள்ளையைப் பட்சிக்க இயலாமல் போனது ஏன்?*
11. *"அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்தினிடத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டது" என்பதில் குறிப்பிடப்படுகிற வேதாகமரீதியான நிகழ்ச்சி என்ன?*



“ஒரு ஸ்திரீ மற்றும் ஒரு வலுசர்ப்பம்” (12:1-4)